Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 707 / 2023

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | பிரபு நாதன் | Calling: | பிரஸ் |
| Father's Name: | ஆனந்தன் | Religion: | |
| Village: | அம்பூர்பேட்டை | Age: | 46 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.01.2026

முதன்மை விசாரணை.

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். என்னுடைய முதன்மை விசாரணை வாக்குமூலத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனக்கு படிக்க தெரியும், படித்து பார்த்து சரியாக இருந்ததால் கையொப்பம் இட்டேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது. இதனை சத்திய பிரமாண வாக்குமூலத்தின் ஒரு பகுதியாக பாவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 16.09.2023 ம் தேதியிட்ட ரூ.9,00,000 ற்கான பாரத ஸ்டேட் வங்கியின் காசோலை எண். 940301 அசல் பு.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 14.09.2023 ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 21.09.2023 ம் தேதியிட்ட குற்றமுறையீடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் RPAD இரசீது பு.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 22.09.2023 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் அலுவலக விலாசத்திற்கு சார்பானதற்கான அஞ்சல் ஒப்பகை அட்டை பு.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5.06.10.2023 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் வீட்டு விலாசத்திற்கு அனுப்பிய அறிவிப்பு பெறப்படாமல் திருப்பபட்ட பிரிக்கப்படாத அஞ்சல் உறை பு.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 30.09.2023 குற்றம்சாட்டப்பட்டவர் அனுப்பிய பதில் அறிவிப்பு பு.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புகார்படி எதிரியை தண்டித்து தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) பிரபு நாதன்